# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 41 | 4 Pages | 11.09.2023 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 41 | 4 பக்கங்கள் | 11.09.2023 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |



## டெல்லி பிரகடனத்திற்கு உறுப்பு நாடுகளுக்கிடையே ஒருமித்த கருத்து பிரதமர் மோடி அறிவிப்பு



டெல்லி, செப். 11

டெல்லி பிரகதி மைதானம் பாரத் மண்பத்தில் நடைபெறுகிறது உலகளாவிய பல்வேறு பிரச்சனைகள் குறித்து தலைவர்கள் விவாதிக்க உள்ளனர் மேலும் படிக்க ஜி20 மாநாடு இந்தியாவின் தலைநகர் டெல்லியில் பிரகதி மைதானம் பாரத் மண்டபத்தில் இரண்டு நாட்கள் நடைபெறுகிறது. இதில் தலைவர்கள் உலகளாவிய பல்வேறு பிரச்சனைகள் குறித்து விவாதிக்கின்றனர்.

## ஆதித்யா எல்1 விண்கலம் 3வது புவி சுற்று வட்டப்பாதைக்கு வெற்றிகரமாக செலுத்தப்பட்டது: இஸ்ரோ




பெங்களூரு, செப். 11

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரி கோட்டாவில் இருந்து கடந்த 2ம் தேதி அன்று காலை 11.50 மணிக்கு பிஎஸ்எல்வி சி57 ராக்கெட் ஆதித்யா எல் 1 விண்கலத்தை சுமந்துகொண்டு சூரியனை நோக்கி வெற்றிகரமாகப் பாய்ந்தது. பின்னர், ஆதித்யா எல்1 விண்கலம் புவி சுற்றுவட்டப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. இந்த விண்கலம் அடுத்தாண்டு ஜனவரி மாதம் 4ம் தேதி அதன் இலக்கை அடையும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது. 4 மாத பயணத்திற்கு பின்னரே விண்கலம் சென்று சேரும் என்றும், அந்த இடத்தில் இருந்து கிரகணங்கள் அல்லது மறைவுகளால் தடையின்றி தொடர்ந்து சூரியனைக் கண்காணித்து ஆய்வு பணியில் இந்த விண்கலம் ஈடுபடும் என்றும் இஸ்ரோ தெரிவித்தது. ஆதித்யா எல் 1 விண்கலத்தின் சுற்றுவட்டப்பாதை வெற்றிகரமாக உயர்த்தப்பட்டது. அடுத்த சுற்றுவட்டப்பாதைக்கு உயர்த்தும் நடவடிக்கை வரும் 10ம் தேதி மேற்கொள்ளப்படும் என இஸ்ரோ அறிவித்தது. இந்நிலையில், சூரியனை நோக்கி பயணிக்கும் ஆதித்யா எல்1 விண்கலம் 3வது புவி சுற்று வட்டப்பாதைக்கு வெற்றிகரமாக செலுத்தப்பட்டதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. மேலும், 15ம் தேதி அடுத்த சுற்றுவட்டப்பாதைக்கு மாற்றம் செய்யப்படும் என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

## சந்திரபாபு நாயுடுவை சந்திக்க அனுமதி மறுப்பு சாலையில் படுத்து போராடிய பவன் கல்யாண்



அமராவதி, செப். 11

ஆந்திர முதல் மந்திரியாக இருந்தபோது வெளிநாட்டு நிறுவனத்துடன் இணைந்து ஊழல் செய்ததாகத் தொடரப்பட்ட வழக்கில், ஆந்திர முன்னாள் முதல் மந்திரி சந்திரபாபு நாயுடு நேற்று கைது செய்யப்பட்டார். இச்சம்பவம் ஆந்திர அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்டுத்தியது. இதையடுத்து, மாநிலத்தின் பல்வேறு இடங்களில் ஆங்காங்கே பேருந்துகள் நிறுத்தப்பட்டதோடு கடைகள், வணிக நிறுவனங்களும் அடைக்கப்பட்டன. மேலும் பாதுகாப்பு நடவடிக்கையாக ஆந்திர மாநிலத்தில் பள்ளி, கல்லூரிகளுக்கு நேற்று விடுமுறை அளிக்கப்பட்டது. இதற்கிடையே, சந்திரபாபு கைது செய்யப்பட்டதற்கு ஜனசேனா கட்சித் தலைவர் பவன் கல்யாண் கண்டனம் தெரிவித்தார். சந்திரபாபு நாயுடுக்கு ஜனசேனா கட்சி துணை நிற்கும். அவரது கைது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை ஆகும். ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சி சட்டம் ஒழுங்கு பிரச்னையை ஏற்படுத்த முயற்சிக்கிறது என்பதையே இது காட்டுகிறது என்றார். சந்திரபாபு நாயுடுவை சந்திக்கச் சென்ற ஜனசேனா கட்சித் தலைவர் பவன் கல்யாணுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இந்நிலையில், ஆந்திர காவல்துறை நடவடிக்கையால் ஆவேசம் அடைந்த பவன் கல்யாண் மற்றும் அவரது ஆதரவாளர்கள் என்.டி.ஆர். மாவட்டத்தில் சாலையில் அமர்ந்தும், படுத்தும் போராட்டம் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. சட்டம்ஒழுங்கைப் பாதுகாக்க தங்களுடன் ஒத்துழைக்குமாறு காவல்துறை அதிகாரிகள் அவரிடம் வேண்டுகோள் விடுத்தனர். இதனையடுத்து பவன் கல்யாணை காவல்துறையினர் கைது செய்துள்ளதாக தகவல் வெளியாகியது.

## மொரோக்கோ நிலநடுக்கம் பலி எண்ணிக்கை 1300ஐ கடந்தது



ரபாட், செப். 11

வடஆப்பிரிக்க நாடான மொரோக்கோ அட்லாண்டிக் பெருங்கடல் மற்றும் மத்திய தரைக்கடலின் எல்லையில் அமைந்துள்ளது. இங்கு நேற்று முன்தினம் இரவு அந்நாட்டின் நேரப்படி 11.11 மணிக்கு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் அந்நாட்டின் தெற்கில் உள்ள மராகேஷ் நகரை மையமாக கொண்டு உண்டானது. நகரில் இருந்து தென்மேற்கே 71 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள ஹைஅட்லஸ் மலைகளில் 18.5 கிலோமீட்டர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது. இது ரிக்டர் அளவில் 6.8 புள்ளிகளாக பதிவானது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மொரோக்கோவின் தேசிய நில அதிர்வு கண்காணிப்பு மையம், நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 7 ஆக பதிவானது என தெரிவித்துள்ளது. இந்த சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் பயங்கரமாக குலுங்கி இடிந்து விழுந்தன. இரவு நேரம் என்பதால் மக்கள் தூங்கி கொண்டிருந்த நிலையில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் பலரால் வீடுகளை விட்டு உடனடியாக வெளியேற முடியவில்லை. இதனால் கட்டிட இடிபாடுகளில் ஏராளமானோர் சிக்கிக் கொண்டனர். வீடுகளை விட்டு வெளியேறிய ஆயிரக்கணக்கான மக்கள் சாலைகளில் தஞ்சம் அடைந்தனர். பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டிடங்களும் சேதமடைந்தன. இந்நிலையில், மொரோக்கோ நிலநடுக்கத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 1300ஐ கடந்துள்ளது. மேலும் 1800க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்துள்ளனர். கட்டிட இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் மீட்புக்குழுவினர், தீயணைப்பு வீரர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

# நாடு நன்றாக இருக்க வேண்டுமென்றால் 40 தொகுதிகளிலும் நாம் ஜெயித்தாக வேண்டும்: முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

கடலூர், செப். 11

மணமக்கள் வீட்டுக்கு விளக்காக, நாட்டுக்குத் தொண்டர்களாக விளங்க வேண்டும் என்று சொல்வேன். இந்தியா கூட்டணி வெற்றி பெற்றால்தான் இந்தியாவையே காப்பாற்ற முடியும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா ராசேந்திரனின் இல்லத் திருமண விழாவில் மணமக்களை வாழ்த்தி காணொலிக் காட்சி வாயிலாக ஆற்றிய உரை வருமாறு:

தனது தொகுதிக்குத் தேவையான திட்டங்களை கேட்டுப் பெறுவதில், சபா. ராசேந்திரன் எப்போதுமே கண்ணும் கருத்துமாக இருப்பார்.

இது என்னை விட நெய்வேலி தொகுதி மக்களுக்கு நன்றாகவே தெரிந்திருக்கும். தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்த போது, நெல்லிக்குப்பம் தொகுதிக்கு உட்பட்ட மலட்டாறு திட்டத்தை நிறைவேற்ற வைத்தார். இதனால், அந்தச் சுற்றுவட்டாரத்தில் இருந்த நாற்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களின் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது.



பொதுவாக, திருமண விழாக்களில் கலந்து கொள்ளும்போது, என்னோட பேச்சின் இறுதியில், நான் ரெண்டு கோரிக்கைகள் வைப்பேன்.

மணமக்கள் தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குத் தமிழிலேயே பெயர் வைக்க வேண்டும் என்கிற முதல் கோரிக்கை. ராசேந்திரன் இல்லத் திருமண விழாவிலே நான் அந்தக் கோரிக்கையை வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன்.

கண்டிப்பாக தமிழில் தான் பெயர் வைப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். அதேபோல, இன்னொரு கோரிக்கை என்னவென்றால், மணமக்கள் வீட்டுக்கு விளக்காக, நாட்டுக்குத் தொண்டர்களாக விளங்க வேண்டும் என்று சொல்வேன். நம்முடைய வீடு மட்டும் அல்ல, நாடும் நன்றாக இருக்க வேண்டும். அதற்காகவும் பங்களிக்க வேண்டும் என்று சொல்வேன். நம்முடைய நாடு நன்றாக இருக்க வேண்டும் என்றால், 2024 பாராளுமன்றத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணி வெற்றி பெற வேண்டும். இந்தியா கூட்டணி வெற்றி பெற்றால்தான் இந்தியாவையே காப்பாற்ற முடியும். ஆகவே, வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு, புதுவையில் இருக்கிற 40 தொகுதிகளிலும் நாம் ஜெயித்தாக வேண்டும்.

அப்படி முழு வெற்றியை பெற்றால்தான் அடுத்து அமையப்போகிற ஒன்றிய ஆட்சியிலும் நாம் முக்கியப் பங்காற்ற முடியும். நாம் எல்லோரும் சேர்ந்து உழைக்க இந்தத் திருமண விழாவில் உறுதி எடுத்துக் கொண்டு, "நாற்பதும் நமதே நாடும் நமதே" என்ற முழக்கத்துடன் விடைபெறுகிறேன். இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

# நஞ்சை சம்பா நெல் சாகுபடி விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் இடு பொருட்கள்

காங்கயம் , செப். 11

காங்கயம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வசந்தாமணி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையில் இருந்து நத்தக்காடையூர், முள்ளிப்புரம், மருதுறை, பழைய கோட்டை, குட்டப்பாளையம், பரஞ்சேர்வழி ஆகிய வருவாய் சுற்று வட்டார கிராம கீழ்பவானி பாசன பகுதிகளில் இந்த ஆண்டு நஞ்சை சம்பா நெல் சாகுபடி செய்வதற்கு கடந்த ஆகஸ்டு மாதம் 19ந் தேதி முதல் வருகிற டிசம்பர் மாதம் 13ந் தேதி வரை தொடர் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இந்த தண்ணீரை பயன்படுத்தி இப்பகுதிகளில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சாதாரண மற்றும் ஒற்றை நாற்று என்னும் திருந்திய நெல் நஞ்சை சம்பா சாகுபடி பணிகள் தற்போது தொடங்கப்பட்டு உள்ளன. இந்த நிலையில் நத்தக்காடையூர் நகர, சுற்றுவட்டார கீழ்பவானி பாசன விவசாயிகள் தற்போது நஞ்சை சம்பா நெல் சாகுபடி பணிகள் மேற்கொள்வதற்கு தேவையான வேளாண் இடுபொருட்கள் நத்தக்காடையூர் துணை வேளாண்மை விரிவாக்க மையத்தில் தயார் நிலையில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதன்படி 120 நாள் முதல் 130 நாள் வயதுடைய மத்திய கால ரகமான ஐ.ஆர்20 ரக நெல், 105 நாள் வயதுடைய குறுகிய கால கோ.ஆர்51 ரக நெல், தூயமல்லி ரக நெல் ஆகிய விதை நெல்கள் இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. மேலும் இந்த ரக விதை நெல்கள் அனைத்திற்கும் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்ட மானியம் வழங்கப்பட உள்ளது. இத்துடன் நெல்லுக்கு விதை நேர்த்தி செய்ய தேவையான உயிர் உரங்கள், நெல் நுண்ணூட்டம் ஆகியவையும் மானியத்தில் வழங்கப்பட உள்ளது. தென்னைக்கு நுண்ணூட்டம், கரும்பு நுண்ணூட்டம், பயிறு வகை நுண்ணூட்டம் மற்றும் சிறுதானிய நுண்ணூட்ட உரங்கள் ஆகியவைகள் தற்போது தயார் நிலையில் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே நத்தக்காடையூர் சுற்று வட்டாரகீழ்பவானிபாசனவேளாண் விவசாயிகள் நஞ்சை சம்பா நெல் சாகுபடிக்கு ஏற்ற விதை நெல், நுண்ணுயிர்உரங்கள்மற்றும்நுண்ணூட்ட உரங்கள் ஆகியவைகளை மானிய விலையில் பெற்று பயனடைவதற்கு நத்தக்காடையூர் துணை வேளாண்மைவிரிவாக்கமையத்தை நேரில் அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 14ந்தேதி முதல் வாழைத்தார் ஏலம்

உடுமலை, செப். 11

கொப்பரை தேங்காய் ஏலம், வியாழக்கிழமை தோறும் பாக்கு மற்றும் தேங்காய் ஏலம் நடைபெற்று வருகிறது. வியாபாரிகள் விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு வாங்கி கேரளாவில் விற்பனை செய்கின்றனர்.

ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தேசிய வேளாண் சந்தை இநாம் மூலம் செவ்வாய்க்கிழமை தோறும் கொப்பரை தேங்காய் ஏலம், வியாழக்கிழமை தோறும் பாக்கு மற்றும் தேங்காய் ஏலம் நடைபெற்று வருகிறது. ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் 2 ஆயிரத்து 600 ஏக்கரில் நெல், 23 ஆயிரம் ஹெக்டேரில் தென்னை, 2 ஆயிரம் ஏக்கரில் வாழை விவசாயம் நடைபெற்று வருகிறது. இதனால் இந்த பகுதியில் விளையும் வாழைத்தார்களை வியாபாரிகள் விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு வாங்கி கேரளாவில் விற்பனை செய்கின்றனர். எனவே ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாழைதார் ஏலம் நடத்தவேண்டும்என்றுவிவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தநிலையில் வாழை விவசாயிகள் பயன் பெறும் வகையில் வியாழக்கிழமை தோறும் வாழைத்தார் ஏலம் நடைபெற உள்ளது. இந்த ஏலம், தேசிய வேளாண் சந்தை இநாம் மூலம் நடைபெறும். இதி குறித்து இயற்கை ஆர்வலர்கள் கூறியதாவது:

இயற்கையை பாதுகாக்கும் வகையில், பாலித்தீன் பொருட்கள் பயன்படுத்துவதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். நுழைவு சீட்டு வழங்கும்போது வாகனங்களைசோதனை செய்து பிளாஸ்டிக் பொருட்களை பறிமுதல் செய்ய வேண்டும்.தடை செய்யப்பட்ட பாலித்தீன் கவர் பயன்படுத்துபவர்களுக்கு, நகராட்சி நிர்வாகம் அபராதம் விதிக்க வேண்டும். நகராட்சி அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்தால் மட்டுமே இயற்கை வளத்தையும், வனவிலங்குகளையும் பாதுகாக்க முடியும் என்றனர்.

# சிறுதானிய உணவு குறித்து பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த கோரிக்கை

திருப்பூர், செப். 11

உடல் ஆரோக்கியத்துக்கு உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் 7 நாட்களாக பள்ளி, கல்லூரிகளில் சிறு தானியங்களின் விழிப்புணர்வு, மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டது.

: உடல் ஆரோக்கியத்துக்கு உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்த வேண்டிய அவசியம், தற்போதைய காலகட்டத்தில் ஏற்பட்டிருக்கிறது. அதன் விளைவாக தான் இந்தாண்டை சிறுதானிய



ஆண்டாக ஐ.நா.,சபை அறிவித்துள்ளது.

கடந்த 7 நாட்களாக பள்ளி, கல்லூரிகளில் சிறு தானியங்களின் விழிப்புணர்வு, மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டது. விழிப்புணர்வு மட்டும், பலன் தருமா என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், பள்ளி மாணவ, மாணவிகள் அளவில் சிறு தானியங்களின் பயன்பாட்டை அதிகப்படுத்த வேண்டியது அவசியம் என பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

குறிப்பாக அரசுப்பள்ளிகளில் படிக்கும் மாணவர் மத்தியில், சிறு தானியங்கள் பயன்பாடு அதிகப்படுத்த வேண்டும். பள்ளி மேலாண்மை குழுவினர் மாணவர்களுக்கு சிறு தானிய உணவு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றனர்.

# ஆனைமலை புலிகள் காப்பக பகுதியில் பிளாஸ்டிக் கழிவுகளால் வனவிலங்குகள் உயிரிழக்கும் அபாயம்

உடுமலை, செப். 11

சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்துள்ள நிலையில், திறந்தவெளியில் பிளாஸ்டிக் கழிவு வீசப்படுகிறது வனவிலங்குகள், பாலித்தீன் கவருடன் உட்கொள்ளும் போது, உயிரிழப்பு நேரிடுகிறது.

ஆனைமலை புலிகள் காப்பகத்தின் கட்டுப்பாட்டில், உள்ள வனச்சரகங்களில் வனவிலங்குகளும், பசுமை மாறாக்காடுகளும், நீர்நிலைகளும் நிறைந்துள்ளன.

அங்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்துள்ள நிலையில், திறந்தவெளியில் பிளாஸ்டிக் கழிவு வீசப்படுகிறது. குறிப்பாக, திறந்தவெளி குப்பை கிடங்கில் வீசப்படும் பிளாஸ்டிக் கழிவுகளால், வனவிலங்குகள் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.பாலித்தீன் கவரில் இருக்கும் உணவு பொருட்களால் கவரப்படும் வனவிலங்குகள், பாலித்தீன் கவருடன் உட்கொள்ளும் போது, உயிரிழப்பு நேரிடுகிறது. இதுகுறித்து இயற்கை ஆர்வலர்கள் கூறியதாவது: இயற்கையை பாதுகாக்கும் வகையில், பாலித்தீன் பொருட்கள் பயன்படுத்துவதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். நுழைவு சீட்டு வழங்கும் போது வாகனங்களை சோதனை செய்து பிளாஸ்டிக் பொருட்களை பறிமுதல் செய்ய வேண்டும்.தடை செய்யப்பட்ட பாலித்தீன் கவர் பயன்படுத்துபவர்களுக்கு, நகராட்சி நிர்வாகம் அபராதம் விதிக்க வேண்டும். நகராட்சி அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்தால் மட்டுமே இயற்கை வளத்தையும், வனவிலங்குகளையும் பாதுகாக்க முடியும் என்றனர்.

# வெளி மாவட்டங்களில் அனுமதியின்றி இயங்கும் சாய ஆலைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்

திருப்பூர், செப். 11

வாட்டர் கிரெடிட் கருத்துருவை நடைமுறைப்படுத்த மத்திய, மாநில அரசுகள் உதவ வேண்டும். நாடு முழுக்க, பூஜ்ய நிலை சுத்திகரிப்பு முறையை அமல்படுத்த வேண்டும்

திருப்பூர்சாய ஆலை உரிமையாளர்கள் சங்க 32வது பொதுக்குழு கூட்டம் திருப்பூர் தெற்கு ரோட்டரி ஹாலில் நடந்தது.கூட்டத்தில் சாயநீரை சுத்திகரித்து மறு சுழற்சி வாயிலாக பயன்படுத்துபவர்களுக்கு கார்பன் கிரெடிட் வழங்குவது போல வாட்டர் கிரெடிட் கருத்துருவை நடைமுறைப்படுத்த மத்திய, மாநில அரசுகள் உதவ வேண்டும்.

வெளி மாவட்டங்களில் அனுமதியின்றி இயங்கும் சாய ஆலைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். திருப்பூரை போல் நாடு முழுக்க, பூஜ்ய நிலை சுத்திகரிப்பு முறையை அமல்படுத்த வேண்டும்.

இம்முறையை முழுமையாக அமல்படுத்திய திருப்பூர் சாய கழிவுநீர் பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு மத்திய, மாநில அரசுகள் வழங்கிய வட்டியில்லா கடனை மானியமாக மாற்றித்தர வேண்டும். வங்கிகள் குறைந்த வட்டியில் கடன் வழங்கவும்,

தற்போதுள்ள வட்டி விகிதத்தை உயர்த்தாமல் இருக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அடர்கலவை உப்பை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.மின் கட்டணம் மற்றும் மின்சார நிலைக் கட்டண உயர்வை, மாநில அரசு, மறுபரிசீலனை செய்ய வேண்டும். மத்திய அரசு வழங்கிய டப் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# பருவமழை இல்லாததால் மரக்கன்றுகள் நடவு செய்ய திட்டம்

தாராபுரம், செப். 11

நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகளில் மரக்கன்று நடவு செய்யும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வனத்துறை நர்சரியில் உற்பத்தி செய்யப்பட்டு, இலவசமாக நடவு செய்து தரப்படுகிறது.

தமிழ்நாடு உயிர் பன்முகத்தன்மை மற்றும் பசுமையாக்கும் திட்டத்தின் கீழ் நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகளில் மரக்கன்று நடவு செய்யும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென அந்தந்த பகுதிகளின் மண் வளம், நில அமைப்புக்கேற்ற மரக்கன்றுகள், அந்தந்த பகுதியில் உள்ள வனத்துறை நர்சரியில் உற்பத்தி செய்யப்பட்டு, இலவசமாக நடவு செய்து தரப்படுகிறது.

கடந்த ஜூலையிலேயே இத்திட்டம் நடைமுறைக்கு வரவேண்டிய நிலையில் எதிர்பார்த்த பருவமழை இல்லாததால் தற்போது மரக்கன்றுகளை நடவு செய்ய வனத்துறையினர் முடிவெடுத்துள்ளனர். திருப்பூர் மாவட்டத்தில் ஆனைமலை புலிகள் காப்பக கட்டுப்பாட்டில் உள்ள தாராபுரம் நர்சரியில் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. வனத்துறையினர் கூறுகையில், நன்கு வளர்ந்த நிலையில் சந்தனம், தேக்கு, மகாகனி, சவுக்கு மற்றும் மலை வேம்பு மரக்கன்றுகள் உள்ளன. அவை இலவசமாகவே நடவு செய்து தரப்படும்.

மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள விவசாய நிலங்கள், அரசு நிலங்களில் மரம் வளர்க்க விரும்புவோர், திருப்பூர் வனச்சரக அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.விருப்பம் தெரிவிப்போரின் இடத்திற்கு நேரில் வந்து, அங்கு மரம் வளர்ப்பதற்கான சூழல் உள்ளதா என, கள ஆய்வு செய்த பின் மரக்கன்றுகள் நடவு செய்து கொடுக்கப்படும். 40 ஆயிரம் மரக்கன்றுகள்தயார்நிலையில் உள்ளன என்றனர்.

# திருமுருகன்பூண்டி ஏ.வி.பி., பள்ளியில் ரத்த தான முகாம்




திருப்பூர், செப். 11

ஐ.எம்.ஏ., ரத்த வங்கி சார்பில் ரத்ததான முகாம் ஏ.வி.பி., பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. மாவட்ட திட்டத்தலைவர் அனந்தராம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

திருப்பூர் திருமுருகன்பூண்டி ஏ.வி.பி., பள்ளி இன்டரேக்ட் கிளப், ரோட்டரி கிளப் ஆப் திருப்பூர் மெட்டல் டவுன் மற்றும் ஐ.எம்.ஏ., ரத்த வங்கி சார்பில் ரத்த தான முகாம் ஏ.வி.பி., பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. முகாமில் ரோட்டரி கிளப் ஆப் திருப்பூர் மெட்டல் டவுன் தலைவர் கார்த்திகேயன் வரவேற்று பேசினார். ஏ.வி.பி. பள்ளி தாளாளர் கார்த்திகேயன் முகாமிற்கு தலைமை தாங்கியதோடு ரத்ததானத்தின் அவசியம் குறித்து சிறப்புரை ஆற்றினார். மாவட்ட திட்டத்தலைவர் அனந்தராம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். கவுரவ விருந்தினர்களாக மாவட்ட ரத்த தான முகாம் தலைவர் கமலா பாஸ்கர் மற்றும் ரத்த வங்கி ஒருங்கிணைப்பாளர் கணேசமூர்த்தி கலந்து கொண்டனர். ஏ.வி.பி., பூண்டி பள்ளி முதல்வர் பிரியா ராஜா, ரோட்டரி வி.என். முத்துராமலிங்கம், பிரேம் ஆனந்த், பிரகாஷ் வாழ்த்துரை வழங்கினர். முகாமில் ரோட்டரி கிளப் ஆப் திருப்பூர் மெட்டல் டவுன் செயலாளர் ராமசந்திரன், பொருளாளர் சுகுமார் கலந்து கொண்டனர். பெற்றோர் மற்றும் தன்னார்வலர்கள் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு ரத்ததானம் செய்தனர்.

பள்ளி ஒருங்கிணைப்பாளர் அபிதாபானு,மேலாளர் ராமசாமி மற்றும் ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாணவி அமிர்தவல்லி நன்றி கூறினார்.

# தேர்தல் அறிக்கையில் 85 சதவீதத்தை தி.மு.க., அரசு நிறைவேற்றி உள்ளது மேயர் பேச்சு



திருப்பூர், செப் 11

முதல் அமைச்சர் தொடங்கி வைத்து, தமிழகம் முழுவதும் பெண்கள் பயனடைய உள்ளனர் திருப்பூர் மாநகராட்சியில் விரைவில் 24 மணி நேரமும் குடிநீர் வினியோகம் செய்யப்படும்திருப்பூர் வடக்கு வட்டத்திற்குட்பட்ட நெருப்பெரிச்சல் கிராமம் கொங்கு கலையரங்கத்தில்மக்கள்தொடர்பு முகாம் நடைபெற்றது. முகாமிற்கு திருப்பூர் சப்கலெக்டர் ஸ்ருதன் ஜெய்நாராயணன்தலைமைதாங்கினார். வடக்கு தாசில்தார் மகேஸ்வரன் வரவேற்றார். இதில் திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் வாழ்த்தி பேசுகையில் "தி.மு.க. தேர்தல் அறிக்கையில் 85 சதவீதத்தை திராவிட மாடல் ஆட்சி நிறைவேற்றி உள்ளது. வரும் 15 ந்தேதி மகளிர் உரிமை திட்டத்தை முதல்அமைச்சர் தொடங்கி வைத்து, தமிழகம் முழுவதும் பெண்கள் பயனடைய உள்ளனர். முதல்அமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சியில் 120 பள்ளிகளில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பசியாறி வருகின்றனர். திருப்பூர் மாநகராட்சியில் விரைவில் 24 மணி நேரமும் குடிநீர் வினியோகம் செய்யப்படும்" என்றார். முகாமில் பல்வேறு துறைகளின் சார்பில் 68 பயனாளிகளுக்கு ரூ.60 லட்சத்து 58 ஆயிரத்து 049 நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இதை சப்கலெக்டர், மேயர் ஆகியோர் வழங்கினார்கள். பொது மக்கள் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 84 மனுக்கள் வழங்கப்பட்டது. முன்னதாக பல்வேறு துறை, மகளிர் சுயஉதவி குழுக்கள் சார்பில் அமைக்கப்பட்டிருந்த ஸ்டால்களை மேயர், சப்கலெக்டர் ஆகியோர் பார்வையிட்டனர். இதில் பயிற்சி கலெக்டர் கிருத்திகா, நெருப்பெரிச்சல் கிராம நிர்வாக அதிகாரி கோவிந்தராஜ், தி.மு.க. பகுதி செயலாளர் ஜோதி, சமூக ஆர்வலர் ஈ.பி. சரவணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# கூட்டணி குறித்து பொதுக்குழு முடிவு எடுக்கும்: இந்தியா என்ற பெயரே போதுமானது ராமதாஸ் பேட்டி



கும்பகோணம், செப். 11

சமூக நீதிதான் எல்லாவற்றிற்கும் சரியான பரிகாரம். பாராளுமன்ற தேர்தலில் எந்த கட்சியுடன் கூட்டணி என்பதை கட்சியின் செயற்குழு பொதுக்குழு கூடி முடிவெடுக்கும்.

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தனது 85வது பிறந்த நாளை முன்னிட்டு கும்பகோணத்தில் 90 ஜோடிகளுக்கு திருமணம் நடத்தி வைத்தார். பின்னர் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது : குறுவை சாகுபடி தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் பாதிப்பு அடைந்து வருகின்றனர். கர்நாடகா அரசு தற்போது தண்ணீர் தர மறுக்கிறது. தமிழக அரசு இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைவரும் ஒரு தாய் மக்களாக வாழ்கிறோம் . சமூக நீதிதான் எல்லாவற்றிற்கும் சரியான பரிகாரம். வருகிற பாராளுமன்ற தேர்தலில் எந்த கட்சியுடன் கூட்டணி என்பதை கட்சியின் செயற்குழு பொதுக்குழு கூடி முடிவெடுக்கும். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு காப்பாற்றுவதற்கு தமிழக காவல்துறை பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. தற்போது உள்ள இந்தியா பெயரே போதும் . பாரத் என்ற பெயர் தேவையில்லை என நான் கருதுகிறேன். தமிழக அரசின் இரண்டு ஆண்டு செயல்பாடு குறித்து இன்னும் மதிப்பெண் போடவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

# சுய பிரசவத்தால் விபரீதம் பட்டுக்கோட்டையில் பெண் பச்சிளம் குழந்தை மர்ம மரணம்: போலீசார் விசாரணை



பட்டுக்கோட்டை, செப். 12


அரசு மருத்துவமனை சார்பில் பட்டுக்கோட்டை போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. குழந்தையின் உடல், வசந்தியின் உடல் பிரேத பரிசோதனைக்காக பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டைசுண்ணாம்புகார தெரு ஆற்றங்கரை பகுதியை சேர்ந்தவர் செந்தில். கட்டிடக்கூலி தொழிலாளி. இவரது மனைவி வசந்தி ( வயது 38 ). இவர்களுக்கு 5 குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில் வசந்தி நேற்று இரவு உடல் நிலை சரியில்லாததால் சிகிச்சைக்காக பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். பின்னர் அங்கு சிகிச்சை பலனின்றி அவர் பரிதாபமாக இறந்தார்.

இதைத் தொடர்ந்து கணவர் மற்றும் உறவினர்கள் மருத்துவமனையில் எந்த தகவலும் சொல்லாமல், எந்த ஆவணத்திலும் பதிவு செய்யாமல் உடனடியாக வசந்தியின் உடலை எடுத்து சென்றனர். இது குறித்து அரசு மருத்துவமனை சார்பில் பட்டுக்கோட்டை போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து போலீசார் செந்தில் வீட்டிற்கு சென்று விசாரணை நடத்தினர். அப்போது வீட்டில் அருகில் இருந்த ஒரு வாளியில் ரத்தகரை இருந்தது. அதனை திறந்து பார்த்த போது உள்ளே பிறந்ததும், இறந்த ஒரு குழந்தையின் சடலம் இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். விசாரணையில் வசந்திக்கு 5 குழந்தைகளை வளர்க்க சிரமப்பட்டு வந்துள்ளார். இதில் 6வதாக ஒரு குழந்தை உருவாகி உள்ளது. அதனால் இந்த குழந்தையை என்ன செய்ய என்று யோசித்துக் கொண்டிருந்தார். இந்நிலையில் பிரசவ நாளும் வந்து குழந்தையும் பிறக்கும் சூழ்நிலையில் மருத்துவமனைக்கு சென்றால் எல்லோருக்கும் தெரிந்து விடும் என்பதால் வீட்டிலேயேசுயபிரசவம்பார்க்க முடிவு செய்திருக்கலாம் என்றும் சுய பிரசவம் பார்த்ததில் குழந்தை இறந்ததாகவும், குழந்தை பிறந்த பிறகு வசந்தி ரத்தப் போக்கு நிற்காமல் அவரும் இறந்ததாக போலீசார் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

பின்னர் குழந்தையின் உடல், வசந்தியின் உடல் பிரேத பரிசோதனைக்காக பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இது குறித்து பட்டுக்கோட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள். இச்சம்பவம் பட்டுக்கோட்டை பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# புரட்சி பயணம் எப்போது தொடங்கும்? ஓ.பி.எஸ்.பேட்டி



மதுரை, செப். 11

எடப்பாடி தலைமையில் நடைபெறுவது அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் அல்ல, அது கும்பல். இந்தியாவை பாரத் என பெயர் மாற்றப்பட்டுள்ளது குறித்து இன்னும் முறையாக அறிவிக்கப்படவில்லை.

மதுரை நாகமலை புதுக்கோட்டை பகுதியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த ஓ. பன்னீர் செல்வம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: காஞ்சிபுரத்தில் தொடங்குவதாக அறிவித்து ரத்தான புரட்சி பயணம் விரைவில் தொடங்க உள்ளது. சனாதனம் பற்றிய பிரச்சனைக்கு ஏற்கனவே முழுமையான அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. இறையாமையை போற்றும் ஒரே கட்சி தி.மு.க. என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். அவர் சொல்வதையெல்லாம் கருத்தாக எடுத்துக்கொள்ள வேண்டாம். எடப்பாடி தலைமையில் இன்று நடைபெறுவது அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் அல்ல, அது கும்பல். இந்தியாவை பாரத் என பெயர் மாற்றப்பட்டுள்ளது குறித்து இன்னும் முறையாக அறிவிக்கப்படவில்லை. முறையாக அறிவிக்கப்பட்ட பின்னர் அறிக்கை விடுவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தஞ்சையில், பனைமர விதைகள் நடும்விழா



தஞ்சாவூர், செப். 11

கல்லணை கால்வாய் கரைகளில் தமிழகத்தின் பாரம்பரிய மரமான பனை மர விதைகள் நடும்விழா நடை பெற்றது. கலெக்டர் தீபக் ஜேக்கப் கலந்து கொண்டு 2 ஆயிரம் பனை விதைகள் நடும் விழாவை தொடங்கி வைத்தார்.

தஞ்சாவூர் வசந்தம் லயன்ஸ் சங்கத்தின் முன்னாள் தலைவர் லயன் வெங்கடேசனின் இளைய மகள் நிர்மலாவின் பிறந்த நாளைமுன்னிட்டுதஞ்சை ரெட்டிப்பாளையம், முருகன் நகரில் உள்ள கல்லணை கால்வாய் கரைகளில் தமிழகத்தின் பாரம்பரிய மரமான பனை மர விதைகள் நடும்விழா வசந்தம் லயன்ஸ் சங்க தலைவர் லயன் கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் தீபக் ஜேக்கப் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 2 ஆயிரம் பனை விதைகள் நடும் விழாவை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு 1,00,00,000 பனை விதை நடுதல் திட்டத்திற்காக நமது சங்கம் சார்பில் வழங்கப்பட்ட 10 ஆயிரம் பனை விதைகளை பெற்றுக் கொண்டார்.

விழாவில் வட்டார தலைவர் லயன் அன்பழகன், கிறிஸ்துமஸ் விழா மாவட்ட தலைவர் லயன் ஸ்டீபன், மண்டல ஜி. எஸ்.டி. ஒருங்கிணைப்பாளர் லயன் பால்ராஜ், தோட்டக்கலை உதவி இயக்குனர் (நடவு பொருள்) கனிமொழி, மேலவெளி ஊராட்சி தலைவர் லதா செந்தில் குமார், செயலாளர் லயன் சீனிவாசன், பொருளாளா லயன் சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இந் நிகழ்வில் முன்னாள் தலைவர் வெங்கடேசன், துணை தலைவர் லயன் வடிவேலன், செயற்குழு உறுப்பினர்கள் லயன் அழகிய மணவாளன், லயன் வில்லியம் ஸ்டீபன்சன், லயன் பிரகாஷ், லயன் அப்துல்லா, லயன் உலகநாதன், லயன் ஹரி பிரசாத், ஊராட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். இந்த சேவைக்கு தனது ஒரு மாத ஊதியத்தை சேவை நிதியாக வழங்கிய முன்னாள் தலைவர் லயன் வெங்கடேசனின் மகள் நிர்மலாவை பாராட்டி சங்கத்தின் சார்பில் பிறந்தநாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# குடிநீர் தட்டுப்பாட்டை போக்க கோரி காலி குடங்களை மரத்தில் தொங்க விட்டு தூக்கிலிடும் போராட்டம்

நெல்லை, செப். 11

பாண்டி என்பவர் குடிநீர் பற்றாக்குறையை தீர்க்கக் கோரி காலி குடங்களை சாலையோர மரத்தில் கயிறு கட்டி தொங்கவிட்டு தூக்கிலிடும் போராட்டம் நடத்தினார். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரைஎங்கள்ஊரில்இருந்த ஆழ்துளை கிணறு மூலம் குடிநீர் கிடைத்து வந்தது.



நெல்லை மாவட்டம் நாங்குநேரி யூனியன் பருத்திப்பாடு பஞ்சாயத்துக்கு உட்பட்டது ஆணைபுரம் கிராமம். இந்த கிராமத்தில் சுமார் 120 வீடுகள் உள்ளன. இவற்றில் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இந்த கிராமத்தில் 15 நாள் முதல் 20 நாட்களுக்கு ஒரு முறை மட்டுமே குடிநீர் வருவதாகவும், சீராக குடிநீர்வினியோகம்செய்யநடவடிக்கை எடுக்க வேண்டும்எனவும்அந்தபகுதியை சேர்ந்த பொதுமக்கள் கலெக்டர் அலுவலகத்திலும், யூனியன் அலுவலகத்திலும் அதிகாரிகளை நேரில் சந்தித்து மனு அளித்தனர். ஆனால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சமீபத்தில் இது தொடர்பாக ஊர் மக்கள் திரண்டு சாலை மறியலில் ஈடுபட்டனர். அப்போதும் நாங்குநேரி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் போலீசார் நேரில் சென்று அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி சீராக குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தனர். ஆனாலும் சுமார் 20 நாட்களாகியும் இதுவரை நீர் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதையடுத்து அந்த பகுதியை சேர்ந்த தென் தமிழர் கட்சியின் மாவட்ட பொறுப்பாளர் பாண்டி என்பவர் குடிநீர் பற்றாக்குறையை தீர்க்கக் கோரி காலி குடங்களை அங்குள்ள சாலையோர மரத்தில்கயிறுகட்டி தொங்கவிட்டு தூக்கிலிடும் போராட்டம் நடத்தினார். இது குறித்து அவர் கூறுகையில், எங்கள் கிராமத்தில் ஜல்ஜீவன் மிஷன் திட்டத்தில் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு வீடுகள் தோறும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டது. ஆனாலும் சுமார் 15 நாட்களுக்கு ஒரு முறை மட்டுமே குடிதண்ணீர் வருகிறது. இதனால் நாங்கள் மிகவும் சிரமம்அடைந்துவருகிறோம். அதிலும் அதிகபட்சம் 15 குடங்கள் மட்டுமே தண்ணீர் கிடைக்கின்றன. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை எங்கள் ஊரில் இருந்த ஆழ்துளை கிணறு மூலம் குடிநீர் கிடைத்து வந்தது. தற்போது அதுவும் பழுதுஏற்பட்டுவிட்டதால் அதை யாரும் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டனர். இதனால் கடும் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இனியாவது அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுத்து சீராக தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அது மட்டுமில்லாமல் எங்கள் ஊரில் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு சுடுகாட்டுக்கு செல்வதற்கு பாதை இல்லை. மழைக் காலங்களில் மிகுந்த சிரமப்பட்டு தகனம் செய்ய உடல்களை கொண்டு செல்கிறோம். இதற்கும் நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று கூறினார்.

# மயிலாடுதுறையில் தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியினர் ஆர்ப்பாட்டம்

மயிலாடுதுறை, செப். 11

மயிலாடுதுறை அருகே கல்வி அலுவலகம் முன்பு தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்திட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




மயிலாடுதுறை அருகே சித்தர்காடு பகுதியில் அமைந்துள்ள வட்டார கல்வி அலுவலகம் முன்பு தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு வட்டார தலைவர் அண்ணாதுரை தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் பன்னீர்செல்வம் முன்னிலை வகித்தனர்,

மேனாள் மாவட்ட தலைவர் முருகேசன், வட்டாரத் தலைவர் சித்ரா ஜாக்குலின் ஆகியோர் முன்னிலை வகித்தனர், வட்டாரத் செயலாளர் அறிவழகன் வரவேற்றார். அப்போது ஆசிரியர் பயிற்சி மாணவர்களைக் கொண்டு பள்ளிகளை ஆய்வு செய்ய வேண்டும், இ . எம் . ஐ . எ ஸ் . பணியை உடனடியாக நீக்கிட வேண்டும், பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்திட வேண்டும் , சரண்டர் விடுப்பு பணப்பயன்களை உடனடியாக அரசு வழங்கிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற ஏராளமான ஆசிரியர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன கோஷங்களை எழுப்பினர். இந்நிகழ்ச்சியில் ராஜ்குமார், பாலசுப்பி ரமணியன், ராபர்ட் சந்தனகுமார், சந்திரா, அருள் தாமஸ் எடிசன் உள்ளிட்ட ஏராளமான ஆசிரியை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# மத்திய அதிவிரைவு படையினர் ஆய்வு: துப்பாக்கி ஏந்தியபடி அணிவகுப்பு

நாகப்பட்டினம், செப். 11

நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு மத்திய அதிவிரைவு படையினர் (ஆர்.ஏ.எப்.) 6 பெண் உட்பட 60 பேர் வருகை தந்தனர். நாகை மாவட்டத்தில் 7 நாட்கள் முகாமிட்டு மீனவ கிராமங்கள் உள்ளூர் போலீசாருடன் இணைந்து ஆய்வு செய்கின்றனர்.



நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு கோவையில் இருந்து மத்திய அதிவிரைவு படையினர் (ஆர்.ஏ.எப்.) துணை கமாண்டர் ராஜேஷ் தலைமையில், 6 பெண் உட்பட 60 பேர் வருகை தந்தனர். பின்னர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பதற்றமான பகுதிகள் எவை? அடிக்கடி பிரச்சினை, கலவரம், சாதி மோதல்கள் உள்ளிட்ட சட்டம்ஒழுங்கு பிரச்சினைகள் உள்ளதா ? என்பன உள்ளிட்ட தகவல்களை துணை கமாண்டர் ராஜேஷ், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஹர்ஷ் சிங்கிடம் கேட்டறிந்தனர்.

தொடர்ந்து நாகை நகர காவல்நிலையத்திலிருந்து வெளிப்பாளையம் காவல் நிலையம் வரை கலவரத்தை கட்டுப்படுத்தும் வஜ்ரா வாகனம், கருவிகள், நவீன எந்திரங்கள் வாகனத்துடன் துப்பாக்கி ஏந்தியபடி அணி வகுப்புடன் சென்றனர். இந்த மத்திய அதிவிரைவு படையினர் நாகை மாவட்டத்தில் 7 நாட்கள் முகாமிட்டு, சிபிசிஎல், நாகை கடற்படை அலுவலகம், மீனவ கிராமங்கள், பதற்றமான, கலவரம் நடக்கும் பகுதிகள் என உள்ளூர் போலீசாருடன் இணைந்து ஆய்வு செய்கின்றனர். இதற்கான ஆய்வறிக்கையை தமிழக டி.ஜி.பி. மற்றும்உள்துறை அமைச்சகத்துக்கு சமர்ப்பிக்க உள்ளனர்.

# சென்னிமலை அருகே வயதான தம்பதியை படுகொலை செய்தது வடமாநில கும்பலை சேர்ந்தவர்களா?

சென்னிமலை, செப். 11

ஈரோடு மாவட்டம் சென்னிமலை அடுத்த முருங்கதொழுவு ஊராட்சிக்கு உட்பட்ட ஒட்டன் குட்டை அருகே கரியங்காட்டு தோட்டம் பகுதியை சேர்ந்தவர் முத்துசாமி (85). விவசாயி. இவரது மனைவி சாமியாத்தாள் (80). இவர்களுக்கு வசந்தி, கவிதா, கலையரசி என திருமணமான 3 மகள்கள் உள்ளனர். அனைவரும் தனியாக வசித்து வருகிறார்கள். முத்துசாமியும், சாமியாத்தாளும் தோட்டத்து வீட்டில் தனியாக வசித்து வந்தனர். நேற்று முன்தினம் இரவு முத்துசாமியும், சாமியாத்தாளும் வழக்கம் போல்சாப்பிட்டு விட்டு வீட்டில் தூங்கினர். இந்நிலையில் நள்ளிரவில் முத்துசாமியின் வீட்டின் கதவை கம்பியால் நெம்பி, கதவை திறந்து உள்ளே நுழைந்த மர்மநபர்கள் தூங்கி கொண்டிருந்த முத்துசாமியை இரும்பு கம்பியால் தாக்கியும், அரிவாளால் வெட்டினர். சத்தம் கேட்டு எழுந்த சாமியாத்தாளையும் மர்மநபர்கள் இரும்பு ராடு மற்றும் அரிவாளால் வெட்டினர். இதில் முத்துசாமியும், சாமியாத்தாளும் ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தனர்.



இந்நிலையில் முத்துசாமியின் மகள் கலையரசியின் மகனான அஜித் (23), தாத்தா, பாட்டியை பார்ப்பதற்காக நேற்று காலை வீட்டிற்கு வந்தார். வீட்டின்கதவுதிறந்திருந்ததால், வீட்டிற்குள் அஜித் சென்றார். அப்போது வீட்டில் ரத்த வெள்ளத்தில் தாத்தாவும், பாட்டியும் கொலை செய்யப்பட்டிருப்பதை பார்த்துஅதிர்ச்சிஅடைந்து கூச்சல் போட்டார். இதுகுறித்து தகவல் அறிந்த சென்னிமலை போலீஸ் இன்ஸ்பெக்டர் சரவணன், டி.எஸ்.பி ஜெயபாலு தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து முத்துசாமி, சாமியாத்தாள் உடலை கைப்பற்றி விசாரணை நடத்தினர். வீட்டினுள் இருந்த பீரோ உடைக்கப்பட்டு அதில் இருந்த பொருட்கள் சிதறி கிடந்தன. சம்பவ இடத்திற்கு போலீஸ் மோப்ப நாய் வீரா வரவழைக்கப்பட்டது. அது அருகில் உள்ள வாழைத் தோட்டம் மற்றும் அருகே உள்ள சாலையில் சிறு தூரம் ஓடி நின்றது. யாரையும் கவி பிடிக்கவில்லை. தொடர்ந்து கைரேகை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு கொலை சம்பவம் நடந்த வீட்டில் பதிவான மர்மநபர்களின் கைரேகைகள், அவர்கள் விட்டு சென்ற தடயங்களை கைப்பற்றினர். 16 பவுன் நகை, 60 ஆயிரம் ரொக்க பணம் கொள்ளை போயிருப்பது தெரியவந்தது. போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் நகை பணத்திற்காக இந்த கொலை மற்றும் கொள்ளை நடந்தது தெரியவந்தது. நேற்று முன்தினம் இரவு 9 மணி அளவில் கொலை மற்றும் கொள்ளை நடந்திருக்கலாம் என போலீசார் சந்தேகிக்கின்றனர். மர்மநபர்கள் வயதான தம்பதி 2 பேரையும் கொடூரமான முறையில் முகத்தை சிதைத்து கொன்றுள்ளனர். எனவே இவர்கள் வடமாநில கும்பலை சேர்ந்தவர்களாக? இருக்கலாம் என போலீசார் சந்திக்கின்றனர். கொலையாளிகளை பிடிக்கும் வகையில் டி.எஸ்.பி. ஜெயபால் தலைமையில் இன்ஸ்பெக்டர்கள், சப்இன்ஸ்பெக்டர்கள் கொண்ட 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளது. கொலை நடந்த வீட்டில் சி.சி.டி.வி. கேமிராக்கள் இல்லை. வீடு தனியாக இருந்ததால் மர்மநபர்களுக்கு அது வசதியாக அமைந்து விட்டது. தனிப்படை போலீசார் அருகே எதுவும் கட்டிட வேலை நடைபெறுகிறதா? அதில் வடமாநிலத்தை சேர்ந்தவர்கள் வேலை பார்த்து வருகிறார்களா? என்று விசாரணையை தீவிரப்படுத்தி வருகின்றனர். இந்த சம்பவத்தால் சென்னிமலை பகுதியில் தனியாக வசிக்கும் வயதானவர்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். எனவே இந்த பகுதியில் இரவு நேரங்களில் போலீசார் ரோந்து பணியை தீவிரப்படுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தருமபுரி மாவட்டத்தில் விநாயகர் சிலைகள் வைக்க கடும் கட்டுப்பாடு

தருமபுரி, செப். 11

வருகின்ற 18.9.2023 அன்று விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படவிருக்கிறது. இப்பண்டிகையையொட்டி பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கு ஆகியவற்றை கருத்தில் கொண்டு, தமிழக அரசு வழிகாட்டு தல்களை வெளியிட்டுள்ளது. சிலை வைத்து வழிபாடு செய்வது மற்றும் கரைப்பது தொடர்பான நிபந்தனைகள் பின்வருமாறு: சிலைகள் அமைக்க அந்தந்த பகுதி சார் ஆட்சியர் அல்லது கோட்டாட்சியர் ஆகியோரிடம் மனு அளித்து அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். நிறுவப்படும் சிலைகள் 10 அடிக்கு மேல் உயரம் கொண்டதாக இருக்கக் கூடாது. கடந்த ஆண்டில் வைக்கப் பட்ட இடங்களை தவிர புதிய இடங்களில் சிலைகளை வைக்க அனுமதி கிடையாது. மேலும், மின்சார வாரியத்தில், மின் இணைப்பு எங்கிருந்து பெறப்படுகிறது என்பதற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும். நிறுவ இருக்கின்ற விநாயகர் சிலையானது சுத்தமான களிமண்ணால் செய்யப்பட்டவையாக இருக்க வேண்டும்.



சிலைகள் நிறுவ அமைக்கப்படும் கொட்டகை எளிதில் தீப்பிடிக்காத பொருட்களைக் கொண்டு நுழைவிடம் மற்றும் வெளியேறும் இடம் ஆகியவை தனித்தனியாக வைத்து போதுமான இடவசதியுடன் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

வழிபாட்டுத் தளங்கள், மருத்துவமனைகள் மற்றும் கல்விக் கூடங்களுக்கு அருகாமையிலும், மக்களின் எதிர்ப்புகள் உள்ள இடங்களிலும் சிலைகள் வைத்து வழிபாடு நடத்தக் கூடாது. காலையில் 2 மணி நேரமும், மாலையில் 2 மணி நேரமும் மட்டுமே ஒலிபெருக்கியை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதேபோல் பாலக்கோடு தனியார் திருமண மண்டபத்தில் விநாயகர் சதுர்த்தி சிலை வைப்பது தொடர்பான கலந்தாய்வு கூட்டம் பாலக்கோடு டி.எஸ்.பி. சிந்து தலைமையில் நடைப்பெற்றது. இதில் பாலக்கோடு, காரி மங்கலம், மாரண்டஅள்ளி, பஞ்சப்பள்ளி, மகேந்தி ரமங்கலம் ஆகிய போலீஸ் நிலைய எல்லைக்குட்பட்ட விநாயகர் சிலை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். இதில் பேசிய டி.எஸ்பி.சிந்து வருகின்ற 18ம் தேதி நடைபெற இருக்கும் விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு வைக்கப்படும் விநாயகர் சிலைகளை கரைக்க 33 நிபந்தனைகள் குறித்து எடுத்துரைத்தார். இந்த கலந்தாய்வு கூட்டத்தில் சிலை அமைப்பாளர்கள், பொதுமக்கள், இன்ஸ்பெக்டர்கள் சுரேஷ், சுப்ரமணி, மற்றும் போலீசார் கலந்து கொண்டனர்.

# குலசேகரம் அருகே மரத்தில் இருந்து தவறி விழுந்து தொழிலாளி சாவு

நாகர்கோவில் , செப். 11

குலசேகரம் அருகே மரத்தில் இருந்துதவறிவிழுந்து தொழிலாளி சாவு

நாகர்கோவில்:குலசேகரம் அருகே விலவூர்கோணம் பகுதியை சேர்ந்தவர் நல்லதம்பி. இவருக்கு 2 மகன்கள் உள்ளனர். இளைய மகன் குமார் (வயது 39), தொழிலாளி. இவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை.

தினமும் காலையில் வேலைக்கு சென்று விட்டு மாலையில் வீடு திரும்புவது வழக்கம். சம்பவத்தன்று வீட்டின் அருகில் தோட்டத்தில் உள்ள மரத்தில் பாக்கு பறிப்பதற்காக ஏறினார். அப்போது மரம் முறிந்து கீழே விழுந்தது. இதில் குமாருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. உடனே அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு ஆசாரிப்பள்ளம் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு சேர்த்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. எனினும் சிகிச்சை பலனளிக்காமல் குமார் பரிதாபமாக இறந்தார். அவரது அண்ணன் அய்யப்பன் புகாரின் பேரில் குலசேகரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# 100 நாள் வேலை திட்ட பெண் மயங்கி விழுந்ததால் பரபரப்பு

அணைக்கட்டு, செப். 11

வேலூர் மாவட்டம் ஒடுகத்தூர் அடுத்த கடலைக்குளம் கிராமத்தை சேர்ந்தவர் செல்வி (48). இவர் 100 நாள் வேலை திட்டத்தில் வேலை செய்து வருகிறார். இந்நிலையில் நேற்று வழக்கம்போல் செல்வி 100 நாள் வேலைக்கு சென்றார். வேலை செய்து கொண்டிருந்த போது திடீரென அவர் மயங்கி கிழே விழுந்தார். இதனைப் பார்த்து அதிர்ச்சியடைந்த அங்கிருந்தவர்கள் உடனே செல்வியை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் மராட்டிபாளையத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.



இதுகுறித்து டாக்டர்கள் கூறுகையில், '100 நாள் வேலைக்கு செல்வோர் அவசரத்தில் சாப்பிடாமல் சென்று விடுகின்றனர். வெயிலின் தாக்கத்தால் செல்விக்கு மயக்கம் ஏற்பட்டுள்ளது. அவருக்கு, முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மற்றபடி ஒரு பிரச்னையும் இல்லை. சிறிது நேரம் ஓய்வுஎடுத்தாலேபோதும்' என்றனர். பணியின்போது பெண் திடீரென மயங்கி விழுந்ததால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. பொதுவாக 100 நாள் வேலை என்பது பெரும்பாலும் ஏரி, குளம், குட்டை, ஆற்று கால்வாய் போன்ற நீர் நிலை பகுதிகளில் தான் வேலை நடக்கும். அப்போது, பணியாளர்கள் வேலை செய்து கொண் டிருக்கும் போது எதிர்பாராத விதமாக விஷப்பூச்சி கடிப்பது, உடைந்த கண்ணாடி பாட்டில் குத்தி கொள்வது போன்றவை நடக்கிறது. அவ்வாறு நடக்கும் போது ஆஸ்பத்திரி செல்ல அதிக நேரம் ஆவதால் 100 நாள் வேலை நடக்கும் ஒவ்வொரு ஊராட்சியிலும் முதலுதவி சிகிச்சை பெட்டியை வைத்திருக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# டி.சி.ஆர். மருத்துவமனையில் பிசியோதெரபிஸ்ட் தின விழா

கிருஷ்ணகிரி, செப். 11

கிருஷ்ணகிரியில் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள டி.சி.ஆர். மல்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை சார்பில் ஆசிரியர் தின விழா மற்றும் பிசியோதெரபிஸ்ட் தினம் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு டி.சி.ஆர்.மல்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் சவுந்தர ராஜ் தலைமை தாங்கி கேக் வெட்டி அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினார்.



இந்த நிகழ்ச்சியில் டி.சி.ஆர். நர்சிங் கல்லூரி முதல்வர் சுமதி, டாக்டர்கள் உதயசந்திரிகா, காமிலா, சையத், முதன்மை அலுவலர் அனிதா, நிர்வாக அலுவலர் சவீர் பாஷா, மேற்பார்வை யாளர் கிருஷ்ணன் மற்றும் மருத்துவ மனை ஊழியர்கள், நர்சிங் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 11.09.2023

# "ஜெயிலர்" படத்தில் பணியாற்றிய 300க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு தங்க நாணயம் பரிசு




ஜெயிலர் படத்தின் வெற்றியை அடுத்த இன்று சக்சஸ் மீட் நடைபெற்றது. இயக்குனர் நெல்சன் திலீப்குமார், தயாரிப்பாளர் கலாநிதி மாறன் மற்றும் படக்குழுவினர் கலந்துக் கொண்டனர்.

இயக்குனர் நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினி நடிப்பில் ஆகஸ்ட் 10ஆம் தேதி வெளியான திரைப்படம் 'ஜெயிலர்'. இந்த படத்தில் மலையாள நடிகர் மோகன்லால், கன்னட நடிகர் சிவராஜ்குமார், ரம்யா கிருஷ்ணன், யோகிபாபு, வசந்த் ரவி, விநாயகன் உள்ளிட்ட திரைப்பிரபலங்கள்பலர்முக்கியகதாபாத்திரத்தில்நடித்துள்ளதால்ரசிகர்கள்இப்படத்தைதிரையரங்குகளில்கொண்டாடினர்.இப்படத்திற்கு அரசியல் தலைவர்கள், திரைப்பிரபலங்கள் என பலர் வாழ்த்து தெரிவித்தனர். மேலும், இப்படம் ரூ.525 கோடிக்கு மேல் வசூல் குவித்தது. 'ஜெயிலர்' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து தயாரிப்பாளர் கலாநிதி மாறன் ரஜினி, நெல்சன் மற்றும் அனிருத்திற்கு கார் மற்றும் காசோலைகளை பரிசாக வழங்கினார். இந்நிலையில், ஜெயிலர் படத்தின் வெற்றியை அடுத்த இன்று சக்சஸ் மீட் நடைபெற்றது. இதில், இயக்குனர் நெல்சன் திலீப்குமார், தயாரிப்பாளர் கலாநிதி மாறன் மற்றும் படக்குழுவினர் கலந்துக் கொண்டனர். இதில், ஜெயிலர் படத்தில் பணியாற்றிய ஊழியர்கள் 300க்கும் மேற்பட்டோருக்கு தயாரிப்பாளர் கலாநிதி மாறன் தங்க நாணயம் வழங்கி சிறப்பித்தார். மேலும், சக்சஸ் மீட்டை தொடர்ந்து அனைவருக்கும் விருந்து வழங்கப்பட்டது. இதில், இயக்குனர் நெல்சன் திலீப்குமாரும் தயாரிப்பாளர் கலாநிதி மாறனும் ஒன்றாக அமர்ந்து உணவு சாப்பிட்டனர்.



# தென்னிந்திய நடிகர் சங்க 67வது பொதுக்குழு கூட்டம்: நடிகர், நடிகைகள் பங்கேற்பு

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் 67வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் தேனாம்பேட்டையில் உள்ள காமராஜர் அரங்கத்தில் இன்று காலை 10 மணிக்கு நடந்தது. கூட்டத்திற்கு சங்க தலைவர் நாசர் தலைமை தாங்கினார். எதிர்கால பொருளாதார திட்டமிடல் குறித்து பொருளாளர் கார்த்தியும், சங்கத்தின் எதிர்கால நலத்திட்டங்கள் குறித்து பொதுச்செயலாளர் விஷாலும் உரையாற்றினார்கள். கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்கள் குஷ்பு, கோவை சரளா, ராஜேஷ், அஜய் ரத்தினம், பசுபதி, ஜூனியர் பாலையா, சி.பி.ராஜ், லதா சேதுபதி, விக்னேஷ் சோனியா, பிரசன்னா, நந்தா, ரமணா, தளபதி தினேஷ், சரவணன், பிரேம்குமார், சீனிவாச ரெட்டி, ரத்தின சபாபதி, பிரகாஷ், வாசுதேவன், ஹேமச்சந்திரன், காளி முத்து உள்பட முன்னணி நடிகர்நடிகைகள்நாடக கலைஞர்கள் என ஏராளமானோர் கலந்துக் கொண்டனர். கூட்டத்தில் மறைந்த நடிகர்கள் டி.பி.கஜேந்திரன், மயில்சாமி, மனோபாலா, மாரிமுத்து, நடிகை அங்காடி தெரு சித்து உள்பட பலருக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 1 நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டது. மேலும் சங்க வளர்ச்சி பணிகள் கட்டிட பணிகள் உள்பட ஏராளமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முன்னதாக செயற்குழு கூட்டம் காலை 9 மணிக்கு நடந்தது. இதில் 23 செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். துணைத்தலைவர் பூச்சி எஸ்.முருகன் நன்றியுரை ஆற்றினார். நடிகர் சங்க கட்டிட நிதிக்காக கலை நிகழ்ச்சிகளை நடத்துவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.

# மின்னல் வேகத்தில் 100 மில்லியன் பார்வை நிமிடங்களைக் கடந்த டிடி ரிட்டன்ஸ்




தமிழ் திரையுலகின் முன்னணி நடிகரான சந்தானம் இயக்குனர் பிரேம் ஆனந்த் இயக்கத்தில் 'டிடி ரிட்டன்ஸ்' திரைப்படத்தில் நடித்துள்ளார். இதில் சந்தானத்திற்கு ஜோடியாக 'வேலையில்லா பட்டதாரி', 'இவன்வேறமாதிரி'போன்றபடங்களில்நடித்தசுரபிகதாநாயகியாகநடித்துள்ளார். மேலும், ரெடின் கிங்ஸ்லி, மொட்ட ராஜேந்திரன், முனீஸ்காந்த், தங்கதுரை, தீபா, சைதை சேது, மானசி ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். ஆர். கே. என்டர்டெயின்மென்ட் தயாரித்துள்ள இந்த படத்திற்கு ஒ.எப்.ஆர்.ஒ இசையமைத்துள்ளார். இப்படம் ஜூலை 28ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகி ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது. இதையடுத்து இப்படம் செப்டம்பர் 1 ஆம் தேதி ஜீ5 ஓடிடி தளத்தில் வெளியானது. இந்நிலையில் இதுவரை ஜீ5 ஓடிடி தளத்தில் வெளியான படங்களில் அதிவேகத்தில் 100 மில்லியன் பார்வை நிமிடங்களை கடந்து இப்படம் சாதனை படைத்துள்ளது. 'டிடி ரிட்டர்ன்ஸ்' திரைப்படம் 100 மில்லியன் பார்வை நிமிடங்களைக் கடந்ததைக் கொண்டாடும் விதமாக, கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள மெரினா மாலில் 'டிடி ரிட்டர்ன்ஸ்' படத்தில் வரும் இடங்களின் மீட்டுருவாக்கம் செய்து பிரத்தியேகமான ஸ்கேரி ரூம் ஜீ5 நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சிங்கிள் ஷாட்டில் உருவாகியிருக்கும் 'லியோ' சண்டைக்காட்சி

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகி வரும் படம் 'லியோ'. இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரிக்கிறார். அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன்,சாண்டி,மேத்யூதாமஸ்ஆகியோர்முக்கியகதாபாத்திரத்தில் நடிக்கும்இப்படத்திற்குஅனிருத்இசையமைக்கிறார்.இப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இங்கிலாந்தில் ஒரே நாளில் 10 ஆயிரத்திற்கும் மேல் 'லியோ' திரைப்படத்தின் டிக்கெட்டுகள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன. வெளியீட்டு தேதி நெருங்க.. நெருங்க இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்து கொண்டே வருகிறது. இந்நிலையில், 'லியோ' திரைப்படம் குறித்த புதிய தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, தொழிற்சாலையில் உருவாகியிருக்கும் இப்படத்தின் சண்டைக் காட்சி ஒன்று சிங்கிள் ஷாட்டில் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.






# 26 வயதில் மரணமடைந்த கால்பந்து வீராங்கனை அதிர்ச்சியில் ரசிகர்கள்

வயலட்டா மிதுல் தமது தேசிய அணிக்காக 40 முறைகளமிறங்கியுள்ளார்.26வயதேயானவயலட்டா மிதுல் ஐரோப்பாவின் பல நாடுகளில் விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மால்டோவா மகளிர் கால்பந்து அணியின் முக்கிய வீரரான வயலட்டா மிதுல் விபத்தில் சிக்கி மரணமடைந்தசம்பவம்மொத்தகால்பந்துரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. மால்டோவா மகளிர் கால்பந்து அணியின் நட்சத்திர வீராங்கனையான 26 வயது வயலட்டா மிதுல் தமது தேசிய அணிக்காக 40 முறை களமிறங்கியுள்ளார்.

இந்த நிலையில் செப்டம்பர் 4ம் திகதி தமது சக கால்பந்து வீராங்கனை ஒருவருடன் மலையேறும் பயிற்சியில் ஈடுபட்டவர் விபத்தில் சிக்கி மரணமடைந்துள்ளார். அவரது மரணம் தொடர்பில் கால்பந்து அணி நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், எங்கள் வீரர், சக வீரர் மற்றும் நண்பரின் திடீர் மரணத்தை எங்கள் இதயங்களில் ஆழ்ந்த சோகத்துடன் அறிவிக்கிறோம் என குறிப்பிட்டுள்ளனர்.

26 வயதேயான வயலட்டா மிதுல் ஐரோப்பாவின் பல நாடுகளில் விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பாபர் அசாம் உலகத்தரம் வாய்ந்த வீரர்: சுப்மன் கில்

பாகிஸ்தான் கேப்டன் பாபர் அசாம், ஆசிய கோப்பை போட்டியில் இதுவரை 3 போட்டிகளில் 168 ரன்கள் அடித்துள்ளார். சராசரி 84 ஆகும். இன்று இந்தியா பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன. இந்த நிலையில் பாபர் அசாம் உலகத்தரம் வாய்ந்த வீரர் என இந்தியாவின் தொடக்க வீரர் சுப்மான் கில் தெரிவித்துள்ளார். மேலும், இந்திய அணியும் அவரை பாராட்டுகின்றன எனத் தெரிவித்துள்ளார். பாபர் அசாம் போன்ற பாகிஸ்தான் வீரர்களின் விளையாட்டு, பின்பற்றுவீர்களா? என்ற கேள்விக்கு, "ஆம். நிச்சயமாக நாங்கள் அவரை பின்பற்றுவோம். ஒரு வீரர் நன்றாகச் செயல்படும்போது, அவர்கள் ஏன் இவ்வளவு சிறப்பாகச் செயல்படுகிறார்கள்? அவர்களின் சிறப்பு என்ன? என்பதைக் கண்டறிய அனைவரும் அவர்களை பார்க்கிறார்கள். . பாபருக்கும் அதுவே பொருந்தும். அவர் ஒரு உலகத் தரம் வாய்ந்த வீரர், நாங்கள் அனைவரும் அவரைப் போற்றுகிறோம்" என்றார்.

# உலக கோப்பை கிரிக்கெட் போட்டி சச்சினுக்கு கோல்டன் டிக்கெட் வழங்கிய ஜெய்ஷா

இந்தியாவில் வரும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் 50 ஓவர் உலக கோப்பை தொடர் நடைபெற உள்ளது. இத்தொடரில் இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்ட 10 அணிகள் கலந்து கொள்கின்றன. உலக கோப்பை தொடரின் தொடக்க ஆட்டத்தில் இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள் அகமதாபாத்தில் மோத உள்ளன. இந்திய அணி தனது தொடக்க ஆட்டத்தில் சென்னையில் ஆஸ்திரேலியாவை



சந்திக்கிறது. இதற்கிடையே, இந்தியாவின்தலைசிறந்த நட்சத்திரங்களுக்கு உலக கோப்பை போட்டிகளை நேரில் காண பிசிசிஐ கோல்டன் டிக்கெட் வழங்கி வருகிறது.

இந்நிலையில், பிசிசிஐ தலைமை செயலாளர் ஜெய் ஷா உலக கோப்பை கிரிக்கெட் போட்டியை நேரில் காண முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் சச்சினுக்கு கோல்டன்டிக்கெட் வழங்கி உள்ளார். இதுதொடர்பான புகைப்படத்தை பிசிசிஐ தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளது. கோல்டன்டிக்கெட் வழங்கிய பிசிசிஐ மற்றும் ஐசிசிக்கு சச்சின் தெண்டுல்கர் நன்றி தெரிவித்துள்ளார்.

# ஆசியக்கோப்பை 2023 தொடர்: மழை குறுக்கீட்டால் இந்தியா, பாக். போட்டி ஒத்திவைப்பு

ஆசியக்கோப்பை 2023 தொடரின், இலங்கை தலைநகர் கொழும்பில் உள்ள பிரேமதாசா ஸ்டேடியத்தில் இன்று நடக்கும் சூப்பர்4 சுற்றின் 3வது ஆட்டத்தில் இந்தியாபாகிஸ்தான்அணிகள்பலப்பரீட்சைதொடங்கின. இந்த ஆட்டத்திற்கான டாஸ் போடப்பட்டது. இதில், பாகிஸ்தான் அணி டாஸ் வென்று பந்து வீச்சை தேர்வு செய்தது. இதைதொடர்ந்து, இந்த ஆட்டத்தில் இந்திய அணி பேட்டிங் செய்வதற்காக களமிறங்கியது. இந்திய அணி சார்பில் தொடக்க வீரர்களாக களமிறங்கிய ரோகித் சர்மா மற்றும் ஷூப்மன் கில் ஆகியோர் அரை சதம் எடுத்து தலா56ரன்கள்மற்றும்58ரன்களில்அடுத்தடுத்துஅவுட்டாகினர்.இதைதொடர்ந்து, விராட் கோலியும் கே.எல்.ராகுலும் விளையாடி வருகின்றனர். இதில், விராட் கோலி 16 பந்துகளில் 8 ரன்களும், கே.எல்.ராகுல் 28 பந்துகளில் 17 ரன்களும் எடுத்து விளையாடி வந்தனர். ஆனால், 24.1 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 147 ரன்கள் எடுத்த நிலையில் மழையால் ஆட்டம் தடைப்பட்டது. போட்டி நடைபெறும் கொழும்பில் இன்று 90 சதவீதம் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக அங்குள்ள வானிலை மையம் தெரிவித்தது. ஆட்டம் பாதிக்கப்பட அதிக வாய்ப்புள்ளது எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. சூப்பர்4 சுற்றில் இந்தியா பாகிஸ்தான் அணிகள் மோதும் ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டு ரத்தானால் மாற்று தினமான (ரிசர்வ் டே) அடுத்த நாளில் நடைபெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், மழை விடாமல் பெய்து வந்ததால், இன்றைய போட்டி தடை செய்யப்பட்டு நாளைக்கு ஒத்திவைக்கப்பட்டது. கனமழையால் மைதானத்தில் ஈரப்பதம் அதிகளவில் இருந்ததால் ரிசர்வ் டேவுக்கு போட்டி மாற்றம் செய்யப்பட்டது. நாளையும் மழை பெய்து போட்டி தடைபட்டால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.